பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 பங்குனி 10 சனிக்கிழமை (23-03-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 118

# பதுங்குகுழிகள் அமைத்து பாதுகாப்பை உறுதிப்படுத்த மக்களிடம் கோரிக்கை!

சாவகச்சேரி, மார்ச் 23

ஸ்ரீலங்காப் படைகள் பெரும் தாக்குதல் ஒன்றுக்கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருப்பதால் பொதுமக்கள் பதுங்கு குழிகளை அமைத்து தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நேற்று விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது.

அறிக்கை விவரம் வருமாறு:-

சிங்கள அரசின் இன அழிப்பின் தொடர்ச்சியாக, மீண்டும் எம்மக்களை அழிக்கும் முயற்சிகள் முனைப்புடன் முடுக்கிவிடப்பட்டுள்ளன. எதிரிப்படை தனது விமானக் குண்டுவீச்சுக்கள், ஷெல் தாக்குதல்கள் என்பவற்றுடன் உளவியல் ரீதியான அழுத்தங்களாலும் மக்களைக் கொன்றுவிட எண்ணிச்செயற்படும் வேளை, நாம் இவ்வாறான எதிரியின் திட்டமிட்ட செயற்பாடுகளில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது இன்று அத்தியாவசியமாகின்றது

### வேகமடையும் இனவெறி, அழிப்பு

சிங்கள இராணுவத்தின் இனவெறி, அழிப்பு நடவடிக்கைகள் இன்றைய காலங்களில் வேகம் கொண்டு காணப்படுவதை நாம் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

இராணுவத்தின் ஆக்கிரமிப்புப் பகுதிகளில் நேரடியாகவும் —

மற்றைய பகுதிகளில் குண்டுத் தாக்குதல், ஷெல்வீச்சு என்ற போர்வையிலும் —

மக்களைக் கொன்று விடுவதுடன் அவ்வாறு கொல்லப்பட்ட மக்கள் புலிகள் என அரசினது தொடர்பு சாதனங்கள் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பிரசாரம் செய்து வருவதை நாம் இன்று காணக்கூடியதாகவுள்ளது.

இந்த வகையில் அண்மையில் இடம்பெற்ற திருகோணமலை, குமரபுரம் படுகொலை வவுனியா சாம்பல்குளச் சம்பவம் மற்றும் பூநகரி நாச்சிக்குடா தாக்குதல்கள் என்பன அரசின் கொடிய இன அழிப்பாக மேற்கொள்ளப்பட்ட தொடர் சம்பவங்களாகும்.

இராணுவத்தின் அழிவுகளில் இருந்து மக்களை பாதுகாக்க புலிகள் இயக்கத்தால் மேற்கொள்ளப்படும் பதில் தாக்குதல்களால் கோபம் கொண்ட இராணுவம் மக்களைக் கொல்வதும், அழிப்பதும் பின்னர் அவர்கள் புலிகள் எனவும், புலிகளின் செயற்

(3 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத்துக்கு 10,000 பேர் சேர்ப்பு

## போரைத் தீவிரப்படுத்த ஏற்பாடு

கொழும்பு, மார்ச் 23

**தமிழர்களுக்கு எதிரான போரை மேலும் தீவிரப்படுத்தும் பொருட்டு—**

**அரசாங்கம் தனது இராணுவத்துக்கு அவசர் அவசரமாக 10,000 இளைஞர்களை உடனடியாகச் சேர்ப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.**

புதியவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக ஸ்ரீலங்காவில் உள்ள இருபது நிலையங்களில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை ''வாக்கின்'' நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

இது குறித்து, இராணுவத்துக்கு ஆட்சேர்க்கும் தலைமை அதிகாரியான மேஜர் ஜெனரல் கெமுனு குலதுங்கா நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் விவரங்களை வெளியிட்டார்.

18 வயதுக்கும் 26 வயதுக்கும் இடைப்பட்ட — குறைந்தது 7 ஆம் தரம் சித்தி அடைந்தவர்கள் — திங்கள் முதல் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் பிரிகேடியர்கள் சூரிய பண்டார, சரத்முனசிங்க, ஆனந்தவீரசேகர, சாளிய குலதுங்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு ராணுவம் மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு பொதுமக்கள் ஆதரவு வழங்க வேண்டும் என்று செய்தியாளர் மாநாட்டில் இவர்கள் கேட்டுக்கொண்டனர். (இ-ரி-3-7-6)

# நாட்டுப்பற்றுள்ள இளைஞர்களை ராணுவத்தில் சேர வருமாறு அழைப்பு

## நேர்முகப்பரீட்சைக்கு உடுப்புகளுடன் வர ஆலோசனை

கொழும்பு. மார்ச் 23

நாட்டைக் காக்க தேசப்பற்றுள்ள இளைஞர்களை இராணுவத்தில் சேருமாறு மேஜர் ஜெனரல் கெமுனு குலதுங்க நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் அழைப்பு விடுத்தார்.

புலிகளிடம் உள்ள பகுதிகளைக் கைப்பற்றுவதற்காக மட்டும் அன்றி, ஏற்கனவே புலிகளிடம் இருந்து கைப்பற்றிய பகுதிகளை தக்க வைக்கவும் புதிய படையினர் தேவைப்படுகின்றனர் என்றும் அவர் கூறினார்.

நேர்முகப் பரீட்சைக்கு வருபவர்கள், நேர்முகப் பரீட்சையிலும் மருத்துவ பரிசோதனையிலும் சித்தி அடைந்தால் உடனடியாக ராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்றும்—

ஆகவே உடனடியாகப் பயிற்சிக்குப் போகும் ஆயத்தத்துடன் தேவையான உடுப்புகளுடன் நேர்முகப் பரீட்சைக்கு வருமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

நேர்முகப் பரீட்சைக்குத் தேவையான சான்றிதழ்களை தாமதம் இன்றி வழங்கி உதவுமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

(இ-ரி-3-7-6)

# கொல்லப்பட்ட, ஊனமுற்ற படையினர் 4,000 பேர்

கடந்த 15 ஆண்டுகளில் ராணுவத்திலிருந்து தப்பிஓடிய 25 ஆயிரம் சிப்பாய்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக கடந்த வருட இறுதியிலும் 10 ஆயிரம் இளைஞர்கள் ராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். வடபகுதிச் சமரில் தற்போது உயிரிழந்த, ஊனமுற்ற சிப்பாய்களின் இடத்துக்கு மேலும் 4 ஆயிரம் சிப்பாய்கள் தேவைப்படுகின்றனர்.

மேற்கண்டவாறு நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் மேஜர் ஜெனரல் கெமுனு குலதுங்கா தெரிவித்தார்.

இதற்கிடையில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் யுத்தத்தில் [illegible] கொல்லப்பட்டனர் என்றும், மூவாயிரத்து [illegible] என்றும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

(இ-ரி-3-7-6)

## ஹெலிநோட்டம்

நேற்றுக்காலை வலிகாமம் மற்றும் நாவற்குழிப் பகுதியில் எம். ஐ 24 ரக ஹெலி ஒன்று பறந்து நோட்டமிட்டுச் சென்றது.

ஹெலியின் பெரும் இரைச்சலைக் கேட்ட அப்பகுதி மக்கள் பதற்றம் அடைந்தனர். (இ-ரி)

## மேயருக்கு அச்சுறுத்தல்

தனது உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாநகர மேயர் செழியன் பேரின்பநாயகம் தெரிவித்துள்ளார்.

தனது பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-3)

## 20 மணி நேர மின்வெட்டு

இலங்கையில் விரைவில் மழை பெய்யாவிட்டால் நாளொன்றுக்கு 20 மணி நேரம் வரை மின் வெட்டை அமுல் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இப்படி பி. பி. ஸி நேற்றுத் தெரிவித்தது.

நீர்த்தேக்கங்களில் உள்ள நீர்மட்டம் இப்போ ஆபத்தான அளவுக்கு குறைவாக உள்ளது என்றும் பி. பி. ஸி தெரிவித்தது. (இ-7)

## இலங்கை கவுன்ஸிலர் பதவி நீக்கம்

ஜோர்தானில் இலங்கை கவுன்ஸிலராக பணியாற்றும் தாவூத்தை பதவியில் இருந்து நீக்குவதென வெளிவிவகார அமைச்சு நேற்று அறிவித்தது.

சட்ட விரோதமாக இலங்கை குழந்தைகளை வெளிநாடுகளுக்கு விற்ற குற்றச் சாட்டின் பேரிலேயே அவரை பதவியில் இருந்து நீக்குவதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை 31 இலங்கை குழந்தைகளை இவர் வெளிநாட்டுக்கு விற்றதாக தெரிவிக்கப்பட்டது. (இ-3-6)

# கொழும்பில் பல இடங்களில் குண்டுப் பொதிகள்!

கொழும்பு, மார்ச் 23

கொழும்பில் பல இடங்களில் குண்டுப் பொதிகள் வைக்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு பொலிஸார் கோரியுள்ளதுடன் சந்தேகத்துக்குரிய பொதிகளை எங்கு கண்டாலும் உடன் தகவல் தருமாறும் கேட்டுள்ளனர்.

குண்டுப் பொதிகளுடன் வடக்கில் இருந்து வரும் விடுதலைப் புலி உறுப்பினர்கள் படையினரால் கைது செய்யப்படலாம் என்ற அச்சத்தில் அந்தப் பொதிகளை கைவிட்டுச் செல்வதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-3)

### தொப்பிக்கல காட்டுப் பகுதியில்

# புலிகள் ஊடுருவலை தடுக்க பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

மட்டக்களப்பு தொப்பிக்கல காட்டுப் பகுதிகளுக்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவுவதைத் தடுக்க பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அங்கு இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வடக்கில் இருந்து கிழக்குக்கு விடுதலைப் புலிகள் ஊடுருவுவதைத் தடுக்கவே இந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். (இ-3)

# வால் நட்சத்திரம் இங்கு தென்பட ஆரம்பித்துள்ளது

சாவகச்சேரி, மார்ச் 23

''ஹியாகுடாவே'' வால் நட்சத்திரம் நேற்று முன்தினம் இரவு கிழக்கு வானில் தென்பட ஆரம்பித்துள்ளது.

இரவு பத்து மணி முதல் அதிகாலை 5 மணிவரை தற்போது புலப்படும் இந்த வால்நட்சத்திரத்தின் பிரகாசம் எதிர்வரும் செவ்வாய், புதன் கிழமைகளில் படிப்படியாக அதிகரித்துச் செல்லும்.

சாதாரண நட்சத்திரத்திலும் விட சற்றுப் பெரிய தோற்றத்துடன் பிற்பகுதியில் வால் போன்ற பகுதி மங்கலான ஒளி வடிவத்தில் இந்த வால் வெள்ளி காணப்படும்.

இடையர் (Bootes) உருக்கோலத்தில் ஆக்ரோறஸ் (Archtaurus) உருவுக்குச் சற்றுக் கிழக்காகக் காணப்படும் இந்த வால் நட்சத்திரம் அதிகாலையில் உச்சிவானுக்கு சற்று வடக்கே துருவ நட்சத்திரத்திற்கு மேலாகத் தென்படும். (உ)

# இடம்பெயர்ந்தோர் விவரம் இன்று முதல் சேகரிப்பு

## ஒத்துழைப்பு வழங்கக் கோரிக்கை

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வடமாரட்சி தென்மராட்சிப் பகுதிகளில் வாழும் மக்கள் தொடர்பான புள்ளி விவரங்கள் கிராமசேவையாளர்களினால் இன்று முதல் சேகரிக்கப்பட உள்ளன.

மக்களின் தேவைகள், மற்றும் அவர்களின் சமூக, பொருளாதார நிலைமைகள் குறித்து இனங்கண்டு அவர்களுக்கு உதவிகள் வழங்கும் நோக்குடன் இந்த புள்ளி விவரங்கள் திரட்டப்படுவதாகவும்—

புள்ளிவிவரங்களை திரட்ட வீடுவீடாக வரும் கிராம சேவையாளர்களுக்கு சரியான விவரங்களை வழங்குமாறும் — அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் கேட்டுள்ளார்.

இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ள நலனோம்பு நிலையங்களிலும் இப்புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படவிருக்கின்றன. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சிங்கர் தையல் மெஷின் ரூ. 7000/-, சுவர் மணிக் கூடு ரூ. 600/- விற்பனைக்கு உண்டு. திருமதி வி. கமலா தேவி, C/o சண்முகநாதன், சரசாலை வடக்கு, சாவகச் சேரி. (41188)

### தேவை

ஆங்கிலம், சிங்களம், தமிழில் மொழிபெயர்க்கக்கூடியவர்கள் தேவை. தகைமைகளுடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி, தென்றல், இலக்கம் 90, யாழ். வீதி, கிளிநொச்சி. (40478)

நமது வெதுப்பகத்துக்கு சகல வேலைகளும் தெரிந்த வாஸ்மாரிகள் தேவை. மற்றும் விவரங்கட்கு: நைலன் வெதுப்பகம், வியாபாரி மூலை, பருத்தித்துறை. (40364)

நல்ல நிலையில் உள்ள தனிநபர் கட்டில்கள் (Single Beds), மெத்தைகள் தேவை. தொடர்பு: K. K. S. கிளினிக் (தனி) வைத்திய ஆலோசனை நிலையம், வல்லிபுர கோவில் வீதி, மந்திகை. (41193)

### சனி மாற்றம்

25 - 12 - 96 வரை வியாழ மாற்ற பலன்களும், 18-4-98 வரை சனி மாற்றப் பலன்களும் ரூ. 10/- (நூலாசிரியர் சத்யா) எங்கும் விற்பனையாகின்றது. உதயன் புத்தக சாலை, ஸ்ரீலிங்கா புத்தக சாலை, கிளிநொச்சி. (40480)

### வாடகைக்கு

பொருள்கள் வாடகைக்கு கொடுக்குமிடம். சில்வர் பீங்கான், ரம்லர், தண்ணீர் ரம்லர், சில்வர்றே, கறிவாளிகள், செம்புகள், பிளாஸ்ரிக் பாய்கள், பந்திப்பாய், குத்து விளக்கு, சமையல் பாத்திரங்கள், கிடாரங்கள், ஐஸ்கிறீம் கப்ஸ். வெள்ளை மாளிகை பெரிய அரசடி, சங்கத்தானை. (41051)

### தவறிவிட்டது

எனது வைலர் கைக்கடிகாரம் 21-3-96 வட இந்து-தம்பசிட்டி கல்லூரி சந்தி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்தால் சன்மானம் வழங்கப்படும். திருமதி சிவப்பிரகாசம், ஆசிரியை, வட இந்து. (40367)

### C. I. M. A. Class

C. I. M. A. Stage I (London Accountancy) வகுப்புக்கள் 28-3-96 காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகின்றன. விவரங்களுக்கு: S. நரேஸ் [ஆசிரியர் Northceylon Technical Institute), மொடேர்ன் ரியூட்டரி, தம்பசிட்டி வீதி, 1ஆம் கட்டையடி, பருத்தித்துறை [ரஞ்சன் பூங்காவிற்கு அருகில்]. (40368)

### COMPUTER CLASS

பிரத்தியேக கணணி வகுப்புக்கள்: புதிய பிரிவுகள் ஆரம்பம்: (22-03-96 / 23-03-96), 3-30 p. m. (Basic, Pascal, d Base III+, Lotus 123, C++) போதிய செய்முறைப் பயிற்சிகளுடன். தொடர்பு: K. Vignesh, Talent Institute, கோவில் சந்தை, கரவெட்டி. (41020)

## புவியியல்

**A/L**

**96 - 96** மீட்டல்
**97**
வகுப்புகள்

ஆசிரியர்:
திரு.R. நித்தி

ஆரம்பம்: **03-04-1996**
புதன் பிற்பகல் 3 மணி

**கலைமகள் கல்வி நிலையம்**
சோலையம்மன் கோவிலடி, மீசாலை.
(அனுமதிகள் இன்று முதல்)
(41081)

---

யாழ்.
## சம்பந்தர் வைத்திய நிலையம்

வழமையான வைத்திய சேவை நடைபெறுகின்றது

இடம்:- சாவகச்சேரி ஆஸ்பத்திரி முன்பாக கந்தையா வீதி சந்தி.

நிர்வாகி
சு. பாலன்

(41191)

---

வடமாகாண புற்றுநோய்—
எயிட்ஸ் நோய்த் தடுப்புச் சங்கம்

## முக்கிய அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் விஷேட செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் **27- 03- 96** புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரியின் பணிமனையிலுள்ள கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் சகல நிர்வாகசபை உறுப்பினர்களும் தவறாது பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

தலைவர்
(வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன்)
(C/3090)

---

## UNIKCO COMPUTER CENTRE
KILINOCHCHI

யாழ். நகரில் கடந்த **10** ஆண்டுகளாக கணனிக்கெனத் தனித்து இயங்கிய யுனிக்கோ கணனி நிலையம் வெகு விரைவில் வன்னி பெருநிலப்பரப்பில் கீழ் காணும் முகவரியில் ஆரம்பமாகவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

நிர்வாகி

49/3, கணேசபுரம்,
கிளிநொச்சி.

(40482)

---

கோண்டாவில் கிழக்கு
அருள்மிகு
## ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயம்

மேற்படி ஆலய மகோற்சவகாலம்
24 — 03 — 96 முதல் 02 — 04 — 96 வரை
என்பதை அம்பிகை அடியார்களுக்கு
அறியத்தருகின்றோம்.

பரிபாலனசபை,
தலைவர்
(41192)

---

அருள்மிகு
## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
சாவகச்சேரி

அன்புடையீர்!

அடியார்களின் வசதியை முன்னிட்டு மேற்படி தேவஸ்தானத்தில் தினசரி நடைபெறும் பூஜை நேரமும் ஆலயத்திருக்கதவு திறந்திருக்கும் நேரமும்.

தினசரி — காலை சந்திப்பூஜை — **8-00** மணி
உச்சிக்காலம் — **10-30** மணி
சாயரட்சை (மாலை) — **5-00** மணி

திங்கள், செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் உச்சிக்காலப் பூசை **12-00** மணிக்கும்,
செவ்வாய் சாயரட்சை பூசை **3-30**க்கும் நடைபெறும்.

பங்குனித்திங்களை முன்னிட்டு
அதிகாலை **5-00** லிருந்து மாலை **7-00** வரை அடியார்கள் பொங்கி வழிபட வசதியாக ஆலயத் திருக்கதவு திறந்திருக்கும்.

குறிப்பு:- தேவஸ்தானத்தில் திருமண வைபவம் நடத்த வசதிகள் செய்துகொடுக்கப்படும்.

நன்றி
தர்மகர்த்தா
ப. மகாகணபதி சர்மா

(41077)

---

## சிவாகி கல்வி நிலையம்
சாவகச்சேரி

**கலை, வர்த்தக**
**A/L 96 - 96 மீட்டல்**
**97 வகுப்புகள்**

எமது வழமையான யாழ்., வடமராட்சி, தென்மராட்சி முன்னணி ஆசிரியர் குழுவினருடன் ஆரம்பமாகின்றன.

ஆரம்பம்:- **02 — 04 — 1996**
செவ்வாய் பிற்பகல் 3 மணி.

அனுமதிகள் 25 - 03 - 1996 தொடக்கம் தினசரி பிற்பகல் 2 — 6 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்)

— நிர்வாகம்
சிவாகி கல்வி நிலையம்,
இலகு சிவன் வீதி, சாவகச்சேரி·

(41080)

---

## தசாப்த நினைவஞ்சலி

தோற்றம்:
15
—
04
—
1927



மறைவு:
23
—
03
—
1986

### கே. டானியல்

சாந்தி நிறை நல்வாழ்வு சமதர்மம் ஒன்றேயென்று
ஏந்தி வழி நடந்து எத்தனையோ போர் தொடுத்து
மாந்தருள் தீண்டாமை மாகொடிய நோயென்று
தீந்தமிழ் இலக்கியத்தாற் செம்மையாய்
எடுத்துரைத்த

மக்கள் எழுத்தாளர்

என்றும் தங்களின் நீங்காத நினைவுகளுடன் வாழும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தற்காலிக முகவரி:
திருமதி ஜனதா ஜோர்ஜ்,
வைத்தியசாலை வீதி,
சாவகச்சேரி.

(41182)

---

## தேடுகின்றார்

தெல்லிப்பளை D.R.O. கந்தோரடியைச் சேர்ந்த கனகலிங்கம் இரஞ்சிதவாணியை, அவரின் அக்கா கோகிலா இசைவாணி அவசரமாக தேடுகின்றார்.

உடன் தொடர்பு கொள்ளவும்.

நா. கனகசூரியர்
''பத்ம மகால்'' நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.
(40370)

---

தபக் காலத்தை முன்னிட்டு
## திருமறைக் கலாமன்றம்
வழங்கும்
# கல்வாரிச் சுவடுகள்

(பக்தி, இசை, உரை நாடகம்)

**24 — 03 — 96** ஞாயிறு மாலை 7 மணி
பயஸ் விளையாட்டு மைதானம்,
மிருசுவில்.

**31 — 03 — 96** ஞாயிறு மாலை 7 மணி
கலட்டு, றோ. க. வித்தியாலயம்.
பருத்தித்துறை.

★ பிரவேசம்: இலவசம் ★

விளம்பர அன்பளிப்பு:
**யாழ்ப்பாணம்**
**ப. நோ. கூ. சங்கம்.**
(சி-29 99)

---

யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியில்
ஆசிரியராகவும், அதிபராகவும்
36 ஆண்டுகள் தொடர் பணிபுரிந்த

### திரு. வே. சந்திரசேகரம்பிள்ளை
B. Sc. Dip. (Ed.)
அவர்களின்



## சேவைநலம் பாராட்டு விழா

இடம்: கமலாசினி வித்தியாலய மண்டபம் மட்டுவில்
காலம்: **1996 - 03 - 24** ஞாயிறு
கலை **9-00** மணி

தலைமை; திரு. வ. ஆறுமுகம் அதிபர் யாழ். புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி.

36 ஆண்டுகள் முத்தான பணிபுரிந்த உத்தமரை தன்னலமற்ற சேவைசார் மனப்பான்மை கொண்ட பெருந்தகையை அகவையால் ஓய்வுபெறும் நிலை பெற்றும் மேலும் ஒழிவு இன்றி சேவையாற்றத்தக்க உளஉடல் வலிமைகொண்ட உத்தமரை பாராட்டிப் பல்லாண்டு வாழ வாழ்த்துவோம் வாரீர்.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கம்
அபிவிருத்திச் சபை, தர்மகர்த்தா சபை.

1996 - 03 - 23
(41199)

---

## 31 ஆம் நாள் நினைவாக

### அமரர் செல்லையா தர்மலிங்கம்

(நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச செயலகம் சண்டிலிப்பாய் — முன்னாள் யாழ். கச்சேரி நிர்வாகக் கிளை பிரதம எழுதுநர்)

உதவிக்கு வருவோர்க்கு சாட்டுச் சொல்லார்
ஒருவரையும் சிறியோராய் எண்ண மாட்டார்
பதவியினை அலங்கரித்த தர்ம லிங்கம்
பண்புதனை நெஞ்சிருத்தி அஞ்ச லித்தோம்.

யாழ். மாவட்ட கிராம சேவையாளர் சங்கம்
யாழ்ப்பாணம்.

(41200)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அள்ளுண்டு போய்விடும்

ஸ்ரீலங்கா நாடாளுமன்றம், இந்த வாரம் தவக்கால் விவகாரத்தால் பெரும் அல்லோல கல்லோலப்பட்டது. அரசாங்கத் தரப்பு உறுப்பினர்களும், எதிர்க்கட்சியினரும் பெரும் வாய்ச் சமரில் ஈடுபட்டிருந்தனர்.

மூன்று நாள்களுக்கு ஒரே தொடர்ச்சியாக இருதரப்பாரும் ஒருவர் மீது மற்றவர் மாறி மாறி சேறு வாரி வீசிக் கொண்டிருந்தனர். அவர்கள் பொழிந்த வசை மாரி நாடாளுமன்றக் கட்டடத்துக்கு அருகே உள்ள தியவன நதியை அசுத்தத்தால் நிரப்பியது!

இப்போதைய அரசாங்கத் தரப்புக்கும், அப்போதைய அரசாங்கத் தரப்புக்கும் இடையில் அரசியல் பகைமைத் தீயை மூட்டி வளர்க்கும் எண்ணெய்யாக தவக்கால் விவகாரம் மாறிவிட்டது.

இதின் விளைவாக, அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் இனப்பிரச்சினை விடயத்தில் நெருக்கம் உண்டாவதாகக் தோன்றிய மின்னல் கீற்றும் மறைந்து விட்டது எனலாம்.

சந்திரிகா அரசாங்கம் தமிழர் மீது திணிப்பதற்கெனத் தயாரித்துள்ள தீர்வை நடைமுறைப்படுத்துவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை.

அதனைப் பெறுவதற்காக, ஐக்கிய தேசியக் கட்சியைத் தமது ''கைக்குள் போடுவதற்கு'' சந்திரிகா முயன்று கொண்டிருந்தார். இது ஒரு தேசியப் பிரச்சினை; அரசியல் போட்டி இல்லாமல் இருதரப்பாரும் கலந்தாலோசித்து இதனைத் தீர்ப்போம்; ஒத்துழையுங்கள்; என்று ஆசைவார்த்தை பேசினார். ரணிலும் அதற்கு இணங்குபவர் போலக் காட்டிக் கொண்டார்.

ஆனால் தவக்கால் விவகாரத்தில் நேரடி விவாதத்துக்கு வருமாறு சந்திரிகாவுக்கு ணில் விடுத்த சவாலும் — அதனை ஏற்றுக்கொள்வதாகக் கூறி, ரணிலை குற்றவாளியாகக் காட்டி சந்திரிகா அளித்த பதிலும் —

இப்போதைக்கு ஒருவர் முகத்தை மற்றவர் பார்க்கக் கூசும் அளவுக்கு நல்லுணர்வைக் கெடுத்து விட்டன.

சந்திரிகாவின் தீர்வுத் திட்டத்தில் உள்ள பல அம்சங்களை ஐ. தே. க. ஏற்கனவே எதிர்த்தது. இப்போது, தவக்கால் விவகாரம் தீர்வுத் திட்டத்தை ஐ. தே. க. முற்றாக நிராகரிக்கும் ஒரு நிலையைத் தூண்டுவித்துள்ளது.

தீர்வுத் திட்டம் குறித்து பௌத்த மகாசங்கம் எங்கே நிற்கிறது என்பது இம்மாத முற்பகுதியில் பிக்குமார் கொழும்பில் நடத்திய கூட்டத்தில் இருந்து தெளிவாகத் தெரிந்துவிட்டது.

எனவே ஐக்கிய தேசியக் கட்சி அதனையும் அனுசரித்து, தவக்கால் விவகாரத்தால் உண்டாக்கியுள்ள பகையைச் சாதிப்பதற்காக, தீர்வுத் திட்டத்தை முழுமையாக எதிர்க்க முடிவு செய்யும் என்று நம்பலாம். அதனோடு தீர்வு யோசனை அள்ளுண்டு போய் விடும்!

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாக ஒரு தரப்பு புறப்படும்போது, அதற்கான வழியில் அடுத்த தரப்பு தடைக் கற்களை வைத்து பாதையை அடைத்து விடுவது தெற்கு அரசியல் தலைவர்களின் வழக்கம். அந்தக் காட்சி மீண்டும் இப்போது மேடையேறுகிறது.

# இடம்பெயர்ந்த மாணவர் தங்கியுள்ள இடங்களில் பரீட்சை நிலையங்கள்

## பரீட்சை ஆணையாளர் இணக்கம்

சாவகச்சேரி, மார்ச் 23

எதிர்வரும் மே மாதம் நடத்த திட்டமிடப்பட்டுள்ள ஜி. சி.ஈ. (சாதாரண)விசேட பரீட்சை நிலையங்களை இடம்பெயர்ந்த மாணவர்களின் நலன்கருதி அவர்கள் தற்போது தங்கியுள்ள மாவட்டங்களிலேயே அமைக்க பரீட்சை ஆணையாளர் ரசல் குணவர்த்தனா இணங்கியுள்ளார்.

யாழ். கல்வி வலயம் இரண்டின் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி, வவுனியாமாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. துரை தியாகராசா, யாழ். வலயம் ஒன்றின் கல்வி அதிகாரி திரு. மனோகரநேரு ஆகியோர் கொண்ட குழு ஒன்று பரீட்சை ஆணையாளருடன் கடந்த வாரம் பேச்சு நடத்தியபோதே அவர் இதற்கு இணக்கம் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்த மாணவர்கள் வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளிலும், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கொழும்பு ஆகிய மாவட்டங்களிலும் தங்கியுள்ளனர் என்றும் —

அவர்கள் பரீட்சைக்கு தோற்ற இடம்பெயர்ந்துள்ள மாவட்டங்களிலேயேபரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்றும் — அவர்கள் பரீட்சை ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பரீட்சை ஆணையாளர் பரீட்சையை மே மாதத்தில் நடத்த வேண்டிய ஏற்பாடுகளை செய்வதாகத் தெரிவித்தார். (இ-3)

# இந்தியா சென்றுவந்தோர் பதியுமாறு கோரிக்கை

சாவகக்சேரி, மார்ச் 23

இராணுவ நடவடிக்கை காரணமாக யாழ். மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து இந்தியா சென்று, திரும்பிவந்தவர்களை, இந்தியா சென்று வசித்ததற்கான அத்தாட்சிப் பத்திரத்துடனும் குடும்பவிவரங்களுடனும் கீழ்க்காணும் முகவரிகளில் வந்து பதியுமாறு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் கோரி உள்ளது.

பதிய வேண்டிய இடங்கள் வருமாறு:-

★ தமிழர் புனர்வாழ்வுக் கழகச் செயலகம், இந்துக் கல்லூரி, சாவகச்சேரி.

★ யாழ்ப்பாண அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனம் முன்பள்ளிக்கல்வி மேம்பாட்டு நிலையக் கட்டடம் நுணாவில், கைதடி.

★ தமிழர் புனர்வாழ்வுக் கழகச் செயலகம், சோமஸ்கந்தா சனசமூக நிலையம், மட்டுவில்.

★ தமிழர் புனர்வாழ்வுக் கழகச் செயலகம், திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், கொடிகாமம்.

★ தமிழர் புனர்வாழ்வுக் கழகச் செயலகம், இயற்றாலை வீட்டுத்திட்டம், வரணி.

★ தமிழர் புனர்வாழ்வுக் கழகச் செயலகம், கண்டி வீதி, பளை.

★ தமிழர் புனர்வாழ்வுக் கழகச் செயலகம், மந்திகை, பருத்தித்துறை.

★ தமிழர் புனர்வாழ்வுக் கழகச் செயலகம், மருதங்கேணி. (இ)

## சவாரி மாடுகளின் கயிற்றில் சிக்கியவர் காயம்

தென்மராட்சி, மார்ச் 23

சவாரி மாடுகள் வெருண்டு ஓடியபோது, அந்த மாடுகளைப் பிணைத்திருந்த கயிற்றில் சிக்கிய ஒருவர் 500 யார் தூரம் மாடுகளால் இழுத்துச் செல்லப்பட்ட சம்பவம் கடந்த செவ்வாய் மாலை கைதடி - நுணாவில் வயல் வெளியில் இடம்பெற்றது.

உணவு வைப்பதற்காக மாடுகளை அவிழ்த்துக் கொண்டுவந்த ஒருவருக்கே இந்த கதி ஏற்பட்டது.

இந்த சம்பவத்தில் காயமடைந்த பண்டத்தரிப்பு பத்திமா மாதா கோவிலடியைச் சேர்ந்த செபஸ்தி முடியப்பு (வயது 50) சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

மாடுகள் இவரை இழுத்துக்கொண்டு ஒடுவதைக் கண்ட சிலர் துரத்திச் சென்று, மாடுகளைச் சுற்றி வளைத்து, மாடுகளின் ஓட்டத்தைக் கட்டுப்படுத்தி இவரை மீட்டனர் என்று கூறப்படுகிறது. (இ-117)

## திருவாசகம் முற்றோதல்

ஈழத் தமிழ் மக்களின் துயர் தீர இறையருள் வேண்டி, யாழ். இந்து சமயப் பேரவையின்ஏற்பாட்டில்இன்று காலை 7 மணி தொடக்கம் கெருடாவில் கந்தசாமி கோவிலில் திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது.

பேரவைத் தலைவர் அருட்கவி சீ. விநாசித்தம்பி தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெறும். (இ-3)

## கல்வி மேம்பாட்டு பேரவை கலந்துரையாடல்

வடமராட்சி, தென்மராட்சி, பளை ஆகிய இடங்களில் உள்ள கல்வி மேம்பாட்டுப் பேரவை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி நூல் நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

மேற்படி உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கல்வி மேம்பாட்டுப் பேரவைச் செயலாளர் திரு. நாக. சண்முகநாதபிள்ளை கேட்டுள்ளார்.

# பல்கலைக்கு தெரிவான மாணவர் அனுமதிக்கடிதம்

## கிளிநொச்சி, சாவகச்சேரியில்

சாவகச்சேரி, மார்ச் 23

யாழ். பல்கலைக் கழகத்துக்கு 95/96 கல்வியாண்டுக்கு தெரிவான மாணவர்களுக்கான அனுமதிக்கடிதங்கள் வன்னி,சாவகச்சேரி ஆகிய இடங்களில் உள்ள பல்கலைக் கழக அலுவலகங்கள் ஊடாக வழங்கப்படவிருக்கின்றன,

இந்த அனுமதிக் கடிதங்கள், கொழும்பில் தங்கி உள்ள மணவர்களுக்கு கொழும்பில் வைத்து ஏற்கனவே விநியோகிக்கப்பட்டுவிட்டதாகவும்—

இவ்வாரமும், அடுத்த வாரமும் கிளிநொச்சியில் உள்ள விவசாய பீட அலுவலகத்தில் வைத்து வன்னிப் பகுதியில் உள்ள மாணவர்களுக்கு வழங்கப்படும் என்றும்—

அதன் பின்னர் சாவகச்சேரியில் உள்ள அலுவகத்தில் வைத்து விநியோகிக்கப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை - புதிய மாணவர்களுக்கான பதிவுகளை அடுத்தவாரத்தில் இருந்து மேற்கொள்ளவும் பல்கலைக் கழக நிர்வாகம் ஏற்பாடு செய்துவருகிறது.

தபால் சேவை சீர்கேட்டை அடுத்தே அனுமதிக்கடிதங்களை பல்கலைக்கழக நிர்வாகம் நேரடியாக விநியோகிக்க ஏற்பாடு செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## மகளிர் அபி: நிலைய கருத்தரங்கு

சாவகச்சேரி, மார்ச் 23

மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆறாவது கருத்தரங்குத் தொடரும் ஜீவாகாரம் வழங்கும் நிகழ்வும் இன்று சனிக்கிழமை கற்குளி பெருங்குளம் சாவகச்சேரியில் இடம் பெறவுள்ளன.

மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுகளில் போசாக்கு சம்பந்தமான விளக்கங்களும், மகளிர் சுய தொழில் வாய்ப்பு திட்டங்களும் ஆராயப்படவுள்ளன.

அத்துடன் சுமார் 60 இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு ஜீவாகாரம் வழங்குவதுடன் அவர்களுக்கு ஏற்ப சுய தொழில் வாய்ப்புக்களுக்கான உதவிகளும் வழங்கப்படவுள்ளன. (இ)

## விலை வீழ்ச்சி

தென்மராட்சி, மார்ச் 23

செத்தல் மிளகாய், ரோர்ச் பற்றரி, சோப் வகைகள் ஆகியவற்றின் விலைகள் சாவகச்சேரி சந்தையில் வீழ்ச்சி அடைந்துள்ளன.

செத்தல் மிளகாய் கிலோ 130 ரூபாவாகவும், ரோர்ச் பற்றறிகள் சோடி 80 ரூபாவாகவும். சன்லைட் 12 ரூபாவாகவும் விற்கப்படுகிறது.

மரக்கறி வகைகளின் விலைகளும் வீழ்ச்சி அடைந்துள்ளன, (இ-117)

# பதுங்கு குழிகளை அமைத்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடுகளால் கொல்லப்பட்டவர்கள் எனவும் விளக்கம் கொடுப்பது வழமையாகி விட்டது. எனவே எமது மக்கள் இவ்வாறான செயற்பாடுகளில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான தற்காப்பு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

### பதுங்கு குழிகள்

அண்மையில் 'யாழ்' குடாநாட்டைக் கைப்பற்றும் இராணுவ நகர்வின் போது தமிழ் மக்கள் பாரிய இடம்பெயர்வை மேற்கொண்டு அரசின் நோக்கை சிதைத்தனர்.

அவ்வாறான இடம்பெயர்வின் காரணமாக மக்கள் தமது இருப்பிடங்களையும், சொத்துக்களையும் இழந்து தமிழீழத்தின் பல பகுதிகளிலும் இராணுவத்தின் ஆக்கிரமிப்பு இல்லாத இடங்களில் மிகவும் அடர்த்தியாகவும், நெருக்கமாகவும் தமது வீடுகளையும், வாழ்விடங்களையும் அமைத்து வாழ்கின்றனர்.

இவ்வாறான வேளையில் அரசு மேற்கொள்ளும் குண்டுத் தாக்குதல்கள் அதிக உயிரிழப்புக்களையும் அழிவுகளையும் உள்ளடக்கி அரசின் நோக்கம் இலகுவாக நிறைவேற வாய்ப்பாக அமைந்துவிடுகிறது.

இவ்வாறான முயற்சிகளுக்கு மக்கள் வாய்ப்பளிக்காது தமது வாழ்விடங்களிலும், அண்மையிலும் பதுங்கு குழிகளை அமைத்து பாதுகாப்பாக இருப்பதன் மூலம் சேதம் குறித்த உயிரிழப்புக்களை ஓரளவு குறைத்துக்கொள்ள முடியும்.

பதுங்கு குழிகளை அமைப்பதில் கணிசமான எண்ணிக்கையினர் காட்டும் அசமத்தனமான போக்குகள் பல அழிவுகளை உண்டாக்கிஉள்ளதுடன் பல்வேறு வகையான பிரிவுத் துயரங்களையும் உருவாக்கியுள்ளன.

பாதுகாப்பான முயற்சிகளை மேற்கொள்வது எம்மையும், எமது சுற்றத்தாரையும் பாதுகாப்பதுடன் எமது இனத்தையே அழிவிலிருந்து பாதுகாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

### தாக்குதலுக்கு படையினர் முஸ்தீபு

எனவே தொடர்ந்தும் இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் மீண்டும் அரச படைகள் தயாராகின்றன. அத்துடன் சித்திரை வருடப்பிறப்பின் முன் தனது தாக்குதல்களைத் தொடங்குவதற்கு திட்டங்களை அரசு வகுத்துள்ளதுடன் இதற்கான இராணுவத் தளபாட ஆயுதங்களையும் செய்துள்ளது. இதன் ஆரம்ப முயற்சியாக இன்று வடமராட்சியிலும் தென்மராட்சியிலும் வான் தாக்குதல்களையும் ஷெல் வீச்சுக்களையும் மேற்கொண்டு மக்களை அழிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது.

நாம் பாதுகாப்பு முயற்சிகளை மேற்கொண்டு செயற்படும்போது, அரசு தொடரும் இன அழிப்பில் இருந்து எம்மை நாம் இலகுவாக காப்பாற்றிக்கொள்ள முடியும்.

போர்க்காலத்தில் அதிகளவான இராணுவத்தினர் கொல்லப்பட்டதும் இதற்கான பழிவாங்கல் செயற்பாடாக அரச படைகள் மக்களை கொல்லும் முயற்சியில் தீவிரம் காட்டுவதும் இன்று அதிகமாகவுள்ளது

அண்மையில் 16 - 03 - 96 அன்று நாச்சிக்குடாவில் அரச படைகள் நடத்திய வான் தாக்குதலில் 16 பொதுமக்கள் உயிரிழக்கவும், 60ச்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயம் அடையவும் காரணமான சம்பவம் அரச படைகள் தமது இழப்புக்களை ஈடுசெய்ய மேற்கொண்ட முயற்சியாகவுள்ளது. இவ்வாறான தாக்குதல்களை இன்று மக்கள் எதிர்பார்க்க வேண்டி உள்ளது. இவ்வாறான அழிவுகளில் இருந்து பாதுகாப்பான முயற்சிகளை மக்கள் இன்று விரைவாக மேற்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

எனவே ஒவ்வொரு குடும்பமும், தனிப்பட்டவர்களும் அநாவசிய உயிர் இழப்புக்களைத் தடுக்க முயற்சிகளை மேற்கொள்வதுடன் வாழ்விடங்கள், பொது இடங்கள், கல்லூரிகள், கோவில்கள் போன்ற அனைத்து இடங்களிலும் பதுங்கு குழிகளை அமைத்து பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

மேலும் போர்க்கால அறிவுறுத்தல்களுக்கு மக்கள் செவிசாய்த்து உடனடியாக அழிவுகளில் இருந்து நாம் எம்மைப் பாதுகாத்துக்கொள்ள விரைவாக பலவழிகளிலும் செயற்பட வேண்டியது அவசியமாகின்றது.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி மாவட்டம் — உருத்திரபுரம்
வரலாற்றுப் பெருமை மிக்க

## அருள்மிகு உருத்திரபுர நாயகி சமேத உருத்திரபுரீஸ்வரர் ஆலய

# குடமுழுக்கு மண்டல பூர்த்தி பெருவிழா

மங்களம் பொங்கும் யுவ வருடம் பங்குனி மாதம் **11** ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை (**24-03-96**) பகல் 11 மணிக்கு எம் பெருமானுக்கு சகஸ்ர (1008) சங்காபிசேகமும் விசேட தீபாராதனையும் நடைபெற்று இரவு மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பெற்ற பூந்தண்டிகையில் எம்பெருமான் வீதிவலம் வரும் காட்சியும் இடம் பெறும். மேற்படி கிரிகை காலத்தில் ஆலயத்துக்கு வந்து தரிசித்து சிவனருள் பெற்று உய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

ஆலய பிரதமகுரு- வேதசிவாகம கிரியா சிரோன்மணி சிவஸ்ரீ ச. **வரதராஜேஸ்வரக் குருக்கள்** தலைமையில் மண்டல பூர்த்தி வைபவங்கள் இடம்பெறும். இதில் சர்வ போதகாச்சாரியார் சிவஸ்ரீ கு. இரத்தினேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள் ஆகியோரும், சர்வ சாதகாச்சாரியார் சிவஸ்ரீ இ. கமலநாத சர்மா, சிவஸ்ரீ நா. இரத்தினேஸ்வர சர்மாவும் பங்கு பற்றுவர்.

விசேட பூசை நடைபெற்று எம்பெருமான் வீதி வலம் வருதல்
மங்கள வாத்திய இசை நிகழ்ச்சி
சிறப்பு சமயச் சொற்பொழிவுகள்
பட்டி மன்றம் என்பன இடம் பெறும்.

நண்பகல் அன்னதானம் இடம் பெறும். சிவனடியார்கள் பால், தயிர், இளநீர், கரும்பு, புஸ்பம், மாலை முதலியன தொடுத்து எம் பெருமானின் திருவருள் பெற்று உய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

பரிபாலன சபை
உருத்திரபுரீச்சரம்.
(சி/4132)

---

## கல்வாரி
## பூரண சுவிசேஷ ஊழியங்கள்
(பிரதிஷ்டை ஆராதனை)

எமது ஆலய பிரதிஷ்டை ஆராதனை எதிர்வரும் **24 - 03 - 96** ஞாயிறு அன்று மாலை **3-30** மணிக்கு எழுதுமட்டுவாள் எனும் இடத்தில் நடைபெறவிருப்பதால் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நன்றி

*சபைமேய்ப்பன், ஊழியர்கள்/விசுவாசிகள்.*

படித்த மகளிர் திட்டம்,
எழுதுமட்டுவாள் வடக்கு,
எழுதுமட்டுவாள்.

நிரந்தர முகவரி:-
கல்வாரி பூரண சுவிசேஷ ஊழியங்கள்,
இல. 89, பிறவுண் வீதி, கொக்குவில்,
யாழ்ப்பாணம்.
(41076)

---

## கலந்துரையாடல்
# விக்னா கல்வி நிறுவனம்
கண்டி வீதி, சாவகச்சேரி.

எமது கல்வி நிறுவன ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் 24- 03- 96 (ஞாயிறு) மாலை 4 மணி. வகுப்புக்கள் ஆரம்பிப்பதற்கான நேர அட்டவணை பற்றி அன்று ஆராயப்படும். சகல ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

நிர்வாகி
மு. ஜெயந்தன்
(41205)

---

# OBITUARY
## MR. GEORGE BENETTE PAUL

Mr.G.B. Paul, Retired Chief Engineer, Irrigation Dept., of Church Rd., Chavakachcheri, dearly beloved husband of Thevamani, father of Late Sathiathevi (nee Paul) and Gnano (A.G. Paul), father-in-law of Ravindran and Ananthi, Grand father of Neethini and Sathiaruban, brother of S.A. Paul, Late E. J. Paul, Mrs. Grace James, Pastor C. R. Paul, Late Pastor H. E. Paul, brother - in - law of Late Thevasagayam, Sister Thevamalar, Thevakirupai, Late Thevathason, Late Thevanesam, and Thevathayalan entered rest on Thursday, 21st March '96.

Funeral will take place at No. 2, Perunkulam Junction, Chavakachcheri at 9.00 a. m. on Saturday 23rd March '96. Cortege will leave residence at 10.00 a. m. for buiial at the Ceylon Pentecostal Misson burial grounds.

Information:
Mrs. T. PAUL
(wife)
2, Perunkulam Junction,
Chavakachcheri.
(41194)

---

## மரணஅறிவித்தல்கள்

### சிவசம்பு சிவநேசன்

காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும், சுதுமலைச் சந்தி மானிப்பாயில் வசித்தவரும், நவாலி அரசடிச் சந்தி சிவநேசன் வர்த்தக நிலைய உரிமையாளரும் ஆகிய சிவசம்பு சிவநேசன் 22- 03- 96 இல் காலமானார்.

அன்னார் சிவசம்பு (சிவசம்பு வர்த்தக நிலையம், மானிப்பாய்) — பத்மாவதி தம்பதிகளின் அன்பு மகனும், புஸ்பராணி, மோகனராசன் (K. K. A. K), யோகராணி, முருகானந்தன் (வர்த்தகர்), கண்ணதாசன் (கண்ணதாசன் களஞ்சியம் சந்தை சாவச்சேரி), பத்மநாதன் (A/L 97, கணிதம் மானிப்பாய் இந்து மாணவன்), கலைவாணி (ஆண்டு 5 மாணவி) ஆகியோரின் அன்பு சகோதரரும், க. சிவலிங்கம், ம. மதனரூபராசா, சசிகலா ஆகியோரின் அன்பு மைத்துனரும், கோபிகா, கீர்த்தனா ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக நாளை 24-03- 96 (ஞாயிற்றுக் கிழமை) காலை 10 மணிக்கு கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. சிவசம்பு
பலகாடு,
காரைநகர்.

த. போ. முகவரி:
108, கண்டி வீதி,
(இலங்கை வங்கி அருகாமையில்)
சாவச்சேரி.
(41202)

---

### குட்டி வஸ்யாம்பிள்ளை
(சின்னத்துரை)

உடுவிலைப் பிறப்பிடமாகவும், அரியாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கு. வஸ்தியாம்பிள்ளை நேற்று முன்தினம் (21-3-96) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குஞ்சுப்பிள்ளையின் அன்புக் கண்வரும், காலஞ்சென்ற வரதராஜனின் (இலங்கை வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர்) தந்தையாரும், நிர்மலாவின் மாமனாரும், கதிரவேலு, காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, சிதேவி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் 23-3-96 காலை 10 மணிக்கு இத்தாவிலில் நடைபெறும்.

தகவல்:
சு. கிருஷ்ணான்
மே/பா, ம. அன்ரனி
(திரவியம்)
இத்தாவில்,
பளை.
(41208)

---

### கோணன் கணபதி

அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட கோணன் கணபதி 22-03-96 அன்று மட்டுவிலில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற மாணிக்கத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கதிரமலை, அன்னம் ஆகியோரின் அன்புத் தந்தையும், குணராசா, பூமணி ஆகியோரது அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியை 22-03-96 நேற்று மட்டுவில் மயானத்தில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
க. பிரபாகரன்
(பேரன்)
தற்போதைய முகவரி:
[illegible]
மட்டுவில்.
(41201)

---

## கண்ணீர் அஞ்சலி

### வேலுப்பிள்ளை தம்பிப்பிள்ளை
(உப அதிபர், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை)

அவர்களின் திடீர் மறைவையொட்டி, எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்*
*பழைய மாணவர் சங்கம்,*
*பாடசாலை அபிவிருத்திச்சங்கம்.*
யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.
யாழ்ப்பாணம்
(41207)

---

## மரண அறிவித்தல்கள்

### சிவசம்பு நடராசா

ஊரெழு கிழக்கை பிறப்பிடமாகக் கொண்ட சிவசம்பு நடராஜா 22.03.1996 நேற்றுக் காலமானார். இவர் இராசலட்சுமியின் அன்புக் கணவரும், விக்கினராஜா, நாகபூசணி, பத்மினி [இலங்கை வங்கி], காலஞ்சென்ற கிருபாகரன் ஆகியோரின் அன்புத்தந்தையும், சுமிதா, விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற வீரசிங்கம், காலஞ்சென்ற அழகேந்திரம் [மலேசியா], சிவசோதி [மலேசியா], ஆயிலியம் [மலேசியா], இராசம்மா [மலேசியா] ஆகியோரின் அன்புச் சகோதரனும், கௌசிகன், அரவிந்தன் கீர்த்தனா, நிருசா, பிரவினா, அஸ்வினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [23. 03. 1996] சனிக்கிழமை காலை 11.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக புலோலி தெற்கு ஆனைவிழுந்தான் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. விக்னராஜா (மகன்)

தற்போதைய முகவரி:
புலோலி தெற்கு,
விஜயா மில்,
பெருந்தெரு.
(41204)

---

*திருமதி*
### வேலுபிள்ளையினார் இளையபிள்ளை

சங்கானை கிழக்கு, நிற்சாமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி வேலுபிள்ளையினார் இளையபிள்ளை நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற வேலுபிள்ளையினாரின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தசாமி, காலஞ்சென்ற மயில்வாகனம், சிவராசா, பூமலர், அப்புராசா, செல்வராசா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மரினா, சின்னம்மா, கௌசலாதேவி, பொ. சற்குணம், புஸ்பமலர், இராசநாயகி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 23-03-1996 பி.ப 12.30 மணியளவில் மட்டுவில் தெற்கு, மருதங்குளம் வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வே. பி. சிவராசா (சிவம்)
(மகன்)
மருதங்குளம் வீதி,
மட்டுவில் தெற்கு,
மட்டுவில்.
(கேடில்ஸ் மைதானம் அருகில்)
(41203)

---

### வேலுப்பிள்ளை தம்பிப்பிள்ளை
(உப அதிபர், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை)

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும், தற்போது 92 A, முருகமூர்த்தி லேன் சங்கத்தானை, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்டிருந்த வேலுப்பிள்ளை தம்பிப்பிள்ளை நேற்று (22-03-96) காலமானார்.

இவர் வேலுப்பிள்ளை - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், நல்லையா - வள்ளியம்மையின் மருமகனும், சாரதாதேவியின் அருமைக் கணவரும், சுகந்தி (சுவிஸ்), சுகந்தவேல், கோமதி (உயர்தர வகுப்பு மாணவி, யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கண்ணனின் (சுவிஸ்) அருமை மாமனாரும், கனகாம்பிகை, காலஞ்சென்ற இராமச்சந்திரன், செல்லத்துரை, பொன்னுத்துரை, முத்தையா, பொன்னம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருலிங்கநாதன் (வர்த்தகர்), லோகநாதன் (C. T. B), செல்வநாதன் (தொழில் நுட்பவியலாளர்), கலைநாதன் (ஆசிரியர், யா / புங்குடுதீவு ம. வி.), ஜெகநாதன் (பிரான்ஸ்), கெங்காதேவி, இராமலிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23-3-96) சனிக்கிழமை பி. ப. 3.00 மணியளவில் அன்னாரின் தற்காலிய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. கலைநாதன்
(ஆசிரியர், யா / புங்குடுதீவு ம. வி.)
92 A, முருகமூர்த்தி லேன்,
சங்கத்தானை,
சாவகச்சேரி.
(41206)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 23-03-96 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org